## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 69/2024** **நாள் : 01.10.2024**

### சென்னை குடிநீர் வாரிய நுகர்வோர்கள்
### 01.10.2024 முதல் கட்டணமின்றி
### பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் செய்து கொள்ளலாம்

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தில் 13.85 இலட்சம் பேர் குடிநீர் / கழிவுநீர் வரி செலுத்திவருகிறார்கள். இதுவரை பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் மேற்கொள்வதற்கு ரூ.100/- கட்டணம் வசூல் செய்யப்பட்டது. 01.10.2024 முதல் பெயர் மாற்றம் / பெயர் திருத்திற்கான கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. உரிய ஆவணங்கள் இணைக்கும் பட்சத்தில் பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் படிவங்கள் சரிபார்க்கப்பட்டு கட்டணம் ஏதுமின்றி உரிய காலத்திற்குள் செய்து தரப்படும்.

வரிசெலுத்துவோர் மற்றும் நுகர்வோர்கள் அந்தந்த பகுதி அலுவலகங்களில் உள்ள வசூல் மையங்களில் பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் படிவங்கள் சமர்பித்து சரிசெய்து கொள்ளலாம்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in